# இணைப்பு - 2.4

## 15.6.98 அன்று காலை 10.00 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் நான்காவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் நான்காவது கூட்டம் 15.6.98 அன்று காலை 10.00 மணியளவில் தலைமைச் செயலகம், பிராதானக் கட்டிடத்தில் உள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர். | தி.மு.க. |
| 2. | திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர், | தா.மா.க. |
| 3. | திரு.எல்.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.பா.பிளாக். |
| 4. | திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், | இ.தே.லீக் |
| 5. | திரு.ஏ.எம்.கோபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, | தமிழ் மாநில குழு |
| 6. | திரு.ஜி.இராமகிருஷ்ணன், | இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்கிஸ்ட்) |
| 7. | திரு.பி.அய்யாக்கண்ணு, | ஜனதா தளம் |
| 8. | திரு.பரமத்தி சண்முகம். | தி.மு.க. |

3. முதல் நிலைக் குழுவின் நான்காவது கூட்டத்தை துவக்கி வைத்து செயலர், ஊரக வளர்ச்சித் துறை அவர்கள் பேசுகையில் சென்ற கூட்டத்தில் முதல் 5 பொருள்கள் மட்டும் தான் விவாதிக்கப்பட்டது என்றும் மாநில திட்ட குழு பரிந்துரையின்அடிப்படையில் மேலும் 21 இனங்களில் குறிப்பிட்டுள்ள கூட்ட விவாதப் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் இதன்படி தங்கள் கருத்துக்களை அரசிற்கு பரிந்துரை செய்யலாம் என்றும் கூறினார். இக்குழுவின் பதவிக்காலம் மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது எனவும் இந்த 6 மாதத்திற்குள் குழுவின் பரிந்துரைகள் அரசுக்கு அளிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநிலக் செயற்குழு உறுப்பினர் திரு,ஏ.எம்.கோபு பேசுகையில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள் எல்லாம் ஒரே மாதிரியாக உள்ளது என்றும் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் இதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். செயலர், ஊரக வளர்ச்சித் துறை பேசுகையில், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகியவைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் தனித்தனியாகும் என்று தெரிவித்தார். அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் பேசுகையில் ஒரு அமைப்புக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மேல் மற்றொரு அமைப்பு அதிகாரம் செலுத்த இயலாது எனவும், தற்போதைய தமிழ்நாடு ஊராட்சிகள் 1994 ஆம் ஆண்டு சட்டம் அப்படிதான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஒவ்வொரு அமைப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்பட வேண்டுமென்றால் அது இயலாது என்றும் தெரிவித்தார்.

5. உறுப்பினர் திரு சந்தானம் பேசுகையில் நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளது என்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு என்ன செயல்பாடு இருக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஊராட்சி என்பது மற்ற மாநிலத்தில் மிக அதிகாரம் கொண்ட ஓர் அமைப்பாக உள்ளது என்றும் அவ்வாறே தமிழ்நாட்டிலும் மாவட்ட ஊராட்சி அமைப்புகளை மிக்க அதிகாரம் கொாண்ட அமைப்பாக உருவாக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். ஊரக வளர்ச்சி இயக்குநதர் பேசுகையில், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரத்தை முறையாக பயன்படுத்தினால் ஊராட்சி ஒன்றிய அமைப்பை வலுவாக்க முடியும் என்றும், ஊரக வளர்ச்சி துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் 80% திட்டங்கள் நிறைவேற்றுவது ஊராட்சி ஒன்றியங்கள் தான் எனவும் **IRDP. EAS. MLA/MPs Scheme, D.D.P. J.R.Y** ஆகிய அனைத்து திட்டங்களும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் தான் செயல்படுத்தப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

6. குடிநீர் வசதி பற்றி விவாதிக்கையில் உறுப்பினர் திரு அய்யாக்கண்ணு ஊராட்சிகளில் தனியார் இல்லங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இது குறித்து அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை) அவர்கள் பேசுகையில் குடிநீர் திட்டம் நிறைவேற்ற வேண்டியது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் அதை பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தர். குடிநீர் திட்டம் நிறைவேற்றும் பணிகளையும் ஊராட்சிகளுக்கு அளித்தால் அவர்களால் ஆகும் செலவீனத்தை சமாளிக்க இயலாது. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இதர நிறுவனங்களிடம் கடனுதவி பெற்று இத்திட்டத்தை நிறைவேற்றுகிறது. ஊராட்சிகளுக்கு கடனுதவி செய்யும் நிறுவனங்கள் அவ்வாறு கடனுதவி அளிக்க முன்வராது ஏனெனில் அவைகள் திரும்ப கடனை செலுத்த இயலாது. கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் செயல்படுத்துகிறது. உள்ளாட்சி நிறுவனங்கள் மேற்கூறிய வாரியத்தை அணுகுவதற்கு அவைகளுக்கு முழு அதிகாரம் உள்ளது. எனவே ஊராட்சிகளில் நிதி பிரச்சனை இல்லை. குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் அமைப்பது மற்றும் பராமரிப்பது போன்ற அத்யாவசியமான செலவுகளை மேற்கொள்ள ஊராட்சி தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும் 15 கோடி ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை அவர் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சிகளை கண்டறிந்து அவற்றிற்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய நிதி உதவி செய்ய வேண்டும் என்றும் தனியார் இல்லங்களுக்கு குடிநீர் இணைப்புத்தர வேண்டுமென்றால் 12584 ஊராட்சிகளிலும் உள்ள இல்லங்களுக்கு அளிக்க வேண்டும். எனவே தற்சமயம் உள்ள நீர் ஆதாரம் மற்றும் நிதி நிலைமை காரணமாக இது இயலாது என்றும் தெரிவித்தார். திரு.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் குடிநீர் திட்டம் ஊராட்சி நிறைவேற்றுவதில் அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் ஆற்றியுள்ள பங்கை குறித்து பாராட்டினார். மேலும் குடிநீர் பராபரிப்புக்காக தனியாக நிதி ஒதுக்கவேண்டும் என்று கூறினார். பொது நிதியிலிருந்து குடிநீர் பம்புகளை பராமரிப்பது ஊராட்சியின் முதல் கடமையாகும். எனவே இதற்காக தனி நிதி ஒதுக்கீடு தேவையில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

(7) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளை மேற்பார்வையிட்டு ஆசிரியர் மற்றும் மாணவர்கள் வருகை பதிவேடுகளை கண்காணிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றிய தலைவர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். இது குறித்து செயலர் ஊரக வளர்ச்சி துறை பேசுகையில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு விட்டனர். எனவே அவர்களுக்கு சம்பளம் வழங்குவது மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது எல்லாம் அரசு தான் செய்ய இயலும் என்றார். மேலும் ஊராட்சி பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறையும் பட்சத்தில் உள்ளாட்சி அமைப்புகள் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் ஆசிரியர்கள் மீது புகார்கள் ஏதும் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வந்தால் அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையை மாவட்ட ஊராட்சியுடன் இணைக்கும்படியும் மாவட்டக் குழுவிற்கும் மாவட்ட ஊராட்சித் தலைவரையே மாவட்ட திட்டக் குழுவினரின் தலைவராக நியமிக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவரை இக்குழுவின் செயலராக நியமிக்கலாமென்றும் திரு.ஜி.ராமக்கிருஷ்ணன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார். விவாதத்திற்கு அளிக்கப்பட்ட பொருள்கள் பற்றி மட்டும் இக்கூட்டத்தில் விவாதிக்கலாம் என்றும் இது போன்ற பொது விவரங்களை குறித்து கடைசி கூட்டத்தில் விவாதிக்கலாம் என்றார். பின்பு கீழ் கண்ட இனங்கள் மீதான விவாத பொருள்கள் குறித்து குழு விவாதித்து ஒரு மனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

<u>கிராம ஊராட்சிகள்.</u>

(1). கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்கள்.
(2). ஊரக வீட்டு வசதி
(3) குடிநீர்
(4). எரிபொருள் மற்றும் மாட்டு தீவனம்
(5). சாலைகள், சிறுபாசனங்கள் மற்றும் ஏனைய போக்குவரத்து தொடர்புகள்
(6). ஊரக மின் மயமாக்கல்
(7). மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள்
(8). வறுமை ஒழிப்புத் திட்டங்கள்.

(8) மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் அடுத்த கூட்டம் ஜூலை மாதம் 7, 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் கோடைக்கானலில் நடைபெறும் என்றும் அக்கூட்டத்தில் மீதமுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கலாம் என்றும் உறுப்பினர்கள்

அனைவரும் தங்கள் சொந்த ஏற்பாட்டில் 7ம் தேதி மாலை 3.00 மணிக்கு அரசு பின்னர் தெரிவிக்கும் இடத்தில் கூட வேண்டுமென்றும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் மூன்று அடுக்கு ஊராட்சிகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் அளிக்கலாம் என்பது பற்றி உறுப்பினர்கள் தங்களது பொது கருத்துக்களையும் இது குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீதான கருத்தக்களையும் எழுத்து வடிவத்தில் ஊரக வளர்ச்சித் துறை செயலருக்கு அனுப்பி வைத்தால் குழுவின் கடைசிக் கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யலாமென்று அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.